தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
ஆகஸ்ட் 19, 2013 இதழுடன் இணைப்பு

விண்டோஸ் 8 க்கான ஆண்டிவைரஸ்

டிஜிட்டல் உலகில் தேவையான பண்பாடு நெறிகள்

வாய்ஸ் பைல் அனுப்பும் வாட்ஸ் அப்



விண்டோஸ் 8 க்கான ஆண்ட்டி வைரஸ்

பல வாசகர்கள், விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கு தாங்கள் மாறியுள்ளதாகவும், அதற்கென தற்போது கிடைக்கும் இலவச ஆண்ட்டி வைரஸ் தொகுப்புகள் வடிவமைக்கப்பட்டு கிடைக்கின்றனவா என்று கேட்டு எழுதியுள்ளனர். சிலர், விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கான ஆண்ட்டி வைரஸ் தொகுப்பு இருந்தால் தான், இந்த புதிய சிஸ்டத்திற்கு மாறலாம் என்று முடிவு செய்திருப்பதனையும் தெரிவித்துள்ளனர்.

இங்கு விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கான இலவச ஆண்ட்டி வைரஸ் தொகுப்புகள் குறித்த தகவல்கள் தரப்படுகின்றன. இங்கு அத்தகைய ஏழு தொகுப்புகளுக்கான விபரங்கள் வழங்கப்படுகின்றன. இவற்றில் எது தேவை

உள்ளே

டிஜிட்டல் உலகில் தேவையான பண்பாடு நெறிகள் பக்கம் 5
வாய்ஸ் பைல் அனுப்பும் வாட்ஸ் அப் பக்கம் 11
இயந்திரங்களின் இயக்கம் அறிய பக்கம் 13

வாசகர்களே...

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துக்களை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளை குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல் 'சிடி'க்கள் குறித்து கம்ப்யூட்டர் மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

நூல்கள் மற்றும் 'சிடி'க்கள் 2013 பிப்ரவரி மாதத்திற்கு முன் வெளியாகியிருக்கக் கூடாது. நூல்கள் மற்றும் 'சிடி'க்களை உருவாக்கியவர், வெளியிட்டவர், கிடைக்கும் இடங்கள், விலை ஆகியவற்றைக் கட்டாயம் குறிப்பிட வேண்டும்.

தினமலர் - கம்ப்யூட்டர் மலர், 39, ஒயிட்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை 600 014
computermalar@dinamalar.in

என வாசகர்களே தேர்வு செய்து கொள்ளலாம். ஆனால், முடிவு செய்து ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்துவது, விண்டோஸ் 8 சிஸ்டத்தைத் தங்களின் கம்ப்யூட்டர்களில் கொண்டுள்ளவர்கள் அனைவரும் மேற்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

1. மைக்ரோசாப்ட் செக்யூரிட்டி எசன்ஷியல்ஸ் (Microsoft Security Essentials): விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கான, வைரஸுக்கு எதிரான பாதுகாப்பினை, மைக்ரோசாப்ட் நிறுவனம் தன் வலைத்தளத்தில் தந்துள்ளது. இதனைச் செயல்படுத்துவது, உங்கள் பெர்சனல் கம்ப்யூட்டரின் செயல்திறனைப் பாதிக்காது. இது தானாகவே



அப்டேட் செய்யப்படுகிறது. இதனைப் பெற செல்ல வேண்டிய இணைய தள முகவரி: http://windows.microsoft.com/en-us/windows/security-essentials-download

2. ஏ.வி.ஜி. (AVG): அனைவருக்கும் நன்றாகத் தெரிந்த ஓர் ஆண்ட்டி வைரஸ் சாப்ட்வேர் ஏவிஜி. விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கு இலவசமாகக் கிடைக்கும் ஆண்ட்டி வைரஸ் தொகுப்புகளில் இது மிகச் சிறந்ததாகும். இது வைரஸ்கள், பயமுறுத்தும் சாப்ட்வேர் தொகுப்புகள், மால்



வேர் தொகுப்புகள் ஆகியவற்றைக் கண்டறிகிறது. பாதுகாப்பில்லாத, சந்தேகத்திற்கு இடமான பைல்களைத் தடுத்து நிறுத்துகிறது. இணைய தள முகவரிகளை ஆய்வு செய்து எச்சரிக்கை செய்கிறது. நம் கம்ப்யூட்டரை வேவு பார்க்கும் முயற்சிகளைத் தடுக்கிறது. டேட்டாக்கள் திருடப்படும் முயற்சிகளை முறியடிக்கிறது. இதனை இலவசமாகப் பெற நீங்கள் செல்ல வேண்டிய இணைய தள முகவரி : http://free.avg.com/in-en/homepage.

3. பண்டா செக்யூரிட்டி (Panda Security): மிகச் சிறந்த விண்டோஸ் 8 ஆண்ட்டி வைரஸ் புரோகிராம்களில் இதுவும் ஒன்று. இதன் சில செயல்பாடுகளை இங்கே பார்க்கலாம். எப்போதும் பாதுகாப்பு, இணைய தள முகவரி மற்றும் இணையத்தை வடிகட்டுதல், தானாக அப்கிரேட் செய்யப்படும் வசதி, கம்ப்யூட்டர் செயல்பாட்டினையும், செயல்படும் விதத்தினையும

கண்காணித்து அறிவித்தல் ஆகியவற்றைச் சிறப்பான செயல்பாடுகளாகக் குறிப்பிடலாம். http://www.pandasecurity.com/india/windows8 என்ற முகவரியில் உள்ள இணையதளத்திலிருந்து இதனை இலவசமாகப் பெறலாம்.

4. அவாஸ்ட் (Avast): இதனைப் பெரும்பாலானவர்கள், முன்பே பயன்படுத்தி, இதன் செயல்திறனை அறிந்திருப்பார்கள். மிகச் சிறந்த விண்டோஸ் 8 ஆண்ட்டி வைரஸ் புரோகிராம்களில் இதுவும் ஒன்று. வைரஸ் மற்றும் ஸ்பைவேர் புரோகிராம்களிலிருந்து முற்றிலும் பாதுகாக்கி



றது. இலவசமாக இதனைப் பெற, நீங்கள் செல்ல வேண்டிய இணைய தள முகவரி: http://www.avast.com

5.பிட் டிபண்டர் ஆண்ட்டி வைரஸ் பிளஸ் (Bit Defender Anti Virus Plus): இலவசமாகக் கிடைக்கும் இந்த ஆண்ட்டி வைரஸ் புரோகிராம், ஸ்பைவேர்களைச் சரியாக அடையாளம் கொண்டு தடுக்கிறது. இது செயல்படும் வேகம் மிக அபாரம். ஆன்லைனில் நிதி பரிவர்த்தனையின்

போதும் பாதுகாப்பு தருகிறது. நம் டிஜிட்டல் அடையாளங்களைப் பாதுகாக்கிறது. தேவையற்ற பாப் அப் விண்டோக்களை எப்போதும் தருவது இல்லை. இதனைத் தனியாக நாம் செட் செய்திட வேண்டியதில்லை. தானாகவே, தன்னை பெர்சனல் கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொண்டு மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. இதனைப் பெற செல்ல வேண்டிய இணைய தள முகவரி: http://www.bitdefender.com/Downloads/

6. அவிரா (Avira): அவிரா ஆண்ட்டி வைரஸ் புரோகிராமும், விண்டோஸ் 8க்கு ஏற்றபடி வடிவமைக்கப்பட்டு, இலவசமாக வழங்கப்படுகிறது. வைரஸ் மற்றும் ஸ்பைவேர் புரோகிராம்கள் மட்டுமின்றி, விளம்பரங்களாக

வரும் ஆட் வேர் புரோகிராம்களையும் தடுக்கிறது. நம் இணைய தளச் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் நிறுவனங்களின் முயற்சிகளை முறியடிக்கிறது. தொடர்ந்து பாதுகாப்பு தருவதுடன், தேடலில் நாம் பெறும் இணைய தளங்களின் பாதுகாப்பு தன்மை குறித்தும், கண்டறிந்து அறிவிக்கிறது. இலவசமாக இதனைப் பெற http://www.avira.com/en/avira-free-antivirus என்ற இணைய தளத்திற்குச் செல்லவும்.

7. காஸ்பெர்ஸ்கி ஆண்ட்டி வைரஸ் (Kaspersky Antivirus) : விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கென முதலில் வெளி வந்த ஆண்ட்டி வைரஸ் தொகுப்புகளில் இதுவும் ஒன்று. பெரும்பாலா



னவர்களால் விரும்பப்படும், இந்த புரோகிராம் ட்ரோஜன் வைரஸ், கெடுதல் விளைவிக்கும் இணைய தளங்களுக்கான லிங்க் ஆகியவை குறித்து மிகச் சரியாக எச்சரிக்கிறது. வைரஸ்களை ஸ்கேன் செய்வதில் இதன் அசாத்திய வேகம் குறிப்பிடத்தக்கது. இதனைப் பெற http://usa.kaspersky.com/downloads என்ற முகவரியில் உள்ள இணையதளம் செல்லவும்.

மேலே தரப்பட்டுள்ள ஆண்ட்டி வைரஸ் புரோகிராம்களுடன், இன்னும் சில இணைய வெளியில் கிடைக்கலாம். அனைத்து புரோகிராம்கள் குறித்தும் அறிந்து, தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தலாம். ஆனால், ஏதாவதொன்றைப் பயன்படுத்துவதே நமக்குப் பாதுகாப்பினைத் தரும்.

தெரிந்துக்கலாமா!

பைட் (‘byte’) என்னும் சொல் ‘by eight’ என்பதன் சுருக்கமாகும். ‘pixel’ என்பது ‘picture cell’ or ‘picture element என்பதன் சுருக்கமாகும்.

வை-பி என்னும் தொழில் நுட்பம் ரேடியோ அலைவரிசைகளைப் பயன்படுத்துகிறது. இதனால் டேட்டாவை அனுப்புவர் மற்றும் பெறுபவர் இடையே எந்த வயர் இணைப்பும் தேவை யில்லை. பொதுவாக வை-பி இத்தகைய இணைப்பினை 50 மீட்டர் சுற்றளவிற்குத் தருகிறது. அதிக வை-பி இணைப்பு கொண்டிருக்கும் நாடுகளில் அமெரிக்கா முதல் இடத்தையும் அடுத்ததாக பிரிட்டன், ஜெர்மனி மற்றும் பிரான்ஸ் ஆகியவையும் இடம் பெறுகின்றன.

டிஜிட்டல் உலகில் தேவையான பண்பாடு நெறிகள்

சமுதாயத்தில் தொழில் நுட்ப வளர்ச்சி ஏற்படுகையில், அது சமுதாயப் பண்பாட்டினையும் பெரும் அளவில் பாதிக்கிறது. சில வெளிப்படையாகவே காணப்படுகின்றன; சில மிக நுண்ணியமாகத் தெரியப்படுகின்றன. இந்த பாதிப்புகள், மக்களின் அன்றாட வாழ்வின் பண்புக் கூறுகளையும் மாற்றுகின்றன. இந்த மாறுதல்களில் சில வேண்டப்பட்டவையாகவும், பல வேண்டப் படாதவாயும் உள்ளன. ஒருவர் பின்பற்றாத சில பண்புக் கூறுகள், மற்றவர்களிடமிருந்து அவரைத் தள்ளி வைக்கலாம். ஏன், பகையையே உண்டாக்கலாம். இங்கு பொதுவாக, நாம் கண்டிப்பாக, மேற்கொண்டு பின்பற்ற வேண்டிய சில பண்புக் கூறுகளை இங்கு பார்க்கலாம்.

1. தொலைபேசியை சைலண்ட் மோடில் வைக்கவும்

மொபைல் போன் பயன்படுத்தாத இடமே இல்லை என்பதை நாம் அனைவருமே ஒத்துக் கொள்கிறோம். இதனால், ஒருவரின் போன் அழைப்பு ஒலி,மணி ஓசை, பாடல் ஓசை அல்லது வேறு சிறப்பாக செட் செய்யப்பட்ட ஒலி என ஒலிக்கிறது. இது அவர் தனியே இருக்கையில், தன்னுடைய வீட்டில் அல்லது அலுவலகத் தனி அறையில் இருக்கையில் சரியானதாக இருக்கலாம். சில இடங்களில், இந்த அழைப்பு ஒலி ஒலிக்கவே கூடாது. அவை, திரைப்படம் பார்க்கும் போது, அருகிலிருப்பவர் நூல் ஒன்றைப் படிக்கும்போது, ஒருவர் உரையாற்றி, மற்றவர்கள் அதனைக் கேட்டுக் கொண்டிருக்கும் போது, அனைவரும் மிகவும் ஈர்ப்புடன் வேலை பார்த்துக் கொண்டிருக்கும்போது, நோயாளியின் அறையில், உயர் அதிகாரி மற்றும் மருத்துவர் அறையில், எனப் பல இடங்களைப் பட்டியலிடலாம். இந்த இடங்களில் எல்லாம், உங்கள் மொபைல் போனின் அழைப்பு ஒலியை மவுனமாக வைத்து, அதிர்வு எனப்படும் வைப்ரேஷன் மட்டும் அமைக்கலாம்.

2. போனுடன் விளையாடுவதை நிறுத்துங்கள்

நாம் ஒருவருடன் பேசுகையில், அவர் நம் பேச்சை உற்றுக் கேட்காமல், மொபைல் போனில் விளையாட்டினை விளையாடுவதோ, அல்லது செட்டிங்ஸ் அமைப்பதோ நமக்கு நிச்சயம் எரிச்சலைத் தரும். மொபைல் போன் மூலம் சோஷியல் இணைய தளங்களைத் தொடர்பு கொண்டு நண்பர்களுடன் தகவல்கள் பரிமாறப்படுவது இப்போது அதிகரித்திருப்பதால், பலர், இத்தகைய தொடர்பிலேயே உள்ளனர். ஆனால், நம்முடன் பேசும் நண்பர்கள் பேசுவதனை இந்நேரத்தில் அலட்சியப் படுத்துகிறோம். நட்பினை வளர்க்க என உருவாக்கப்பட்ட சமுதாய இணைய தளங்கள், பல வேளைகளில், நேரடியாக ஈடுபடாமலேயே,

நட்பினை முறிக்கும் தளங்களாகவும் மாறுகின்றன. எனவே, மற்றவர்கள் உங்களுடன் பேசுகையில், சமூக நிகழ்வு ஒன்றில் பங்கெடுத்துக் கொண்டிருக்கையில், மொபைல் போன் அல்லது லேப்டாப்பில் தொடர்பு கொள்வதனை அறவே மேற்கொள்ளக் கூடாது. கட்டாயம் இந்த சாதனங்கள் மூலம் தொடர்பு கொண்டே ஆக வேண்டும் எனில், நம்மிடம் பேசுபவரிடம் நிலையை எடுத்துக் கூறியபின்னர், அல்லது சமூக நிகழ்விலிருந்து விலகியோ, அத்தொடர்பினை மேற்கொள்ள வேண்டும்.

3. காலத்தைக் கடைப்பிடிக்கவும்

இன்றைய மொபைல் தொழில் நுட்பம், நம் முடைய தகவல் பரிமாற்றத்தினை மிக மிக எளிதாகவும், குறிப்பிட்ட நேரத்திலும் மேற்கொள்ளும் வசதியைத் தந்துள்ளது. நேரடியாக ஒருவரிடம் பேசுவதைக் காட்டிலும், மெசேஜ் மூலம் நம் செயல்பாட்டினை எளிதாக மற்றவருக்குத் தெரிவிக்கலாம். இந்த வசதி, நாம் எந்த ஒரு நிகழ்விற்கும், சரியான நேரத்திற்குச் செல்வதனை எதிர்பார்க்கிறது. நிகழ்வில் மாற்றங்கள் ஏற்படும் சூழ்நிலை ஏற்படும் போது, அதனோடு சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய கடமையையும் நம்மிடம் சுமத்துகிறது. எனவே, சரியான நேரத்திற்கு ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதனையும், அது நேரம் மாற்றப்படும் போது, மற்றவருக்குத்

தெரிவிக்க வேண்டுவதனையும் நாம் பின்பற்ற வேண்டும்.

4. திரைப்படம் பார்க்கையில் எலக்ட்ரானிக் சாதனங்கள் எதற்கு?

திரைப்பட நிலையங்களில் சிலர் தங்களுடைய எலக்ட்ரானிக் சாதனங்களான, மொபைல் போன், ஐ பேட், ஐபோன், ஸ்மார்ட் போன் ஆகியவற்றை இயக்கிக் கொண்டிருப்பார்கள். அல்லது செட்டிங்ஸ் மாற்றிக் கொண்டிருப்பார்கள். இவர்கள், மற்றவர்கள் தங்களைக் கவனிக்கவில்லை என்றும், தங்கள் சாதனங்களில் ஏற்படும் ஒலி, மற்றவர்களுக்கு இடைஞ்சலாக இல்லை என்றும் எண்ணிக் கொண்டிருப்பார்கள். ஆனால், அப்படி நிகழ்வ

தில்லை. அருகில் இருப்பவர்கள், இவர் ஏன் இங்கு வந்து இந்த வேலையை மேற்கொண்டிருக்கிறார் என்றுதான் எரிச்சல் பட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த சாதனங்களின் திரை வெளிச்சமே மற்றவரின் கவனத்தைத் திருப்பும் எரிச்சல் அம்சமாக இருக்கும். எனவே, திரைப்பட நிலையங்களில், இவற்றை இயங்காமல் முடக்கி வைப்பதே நல்லது. மொபைல் போன் போன்றவற்றில் அழைப்புகள் இருந்தால், அதற்கென செட் செய்யப்பட்ட மெசேஜை அனுப்பலாம். அல்லது போனையே ஆப் செய்து வைக்கலாம்.

5. மெசேஜ் வரிகளில் பண்பு

முன்பெல்லாம், இளைஞர்களே அதிகம் டெக்ஸ்ட் மெசேஜினைப் பயன்படுத்தி வந்தனர். பெரும்பாலும் வெட்டிப் பேச்சுகளை, வர்ணனைகளே இருந்து வந்தன. இதற்கான வாக்கியங்கள் அரைகுறை வாக்கியங்கள், எழுத்துப் பிழைகள், முற்றுப் பெறாத சொற்கள் என இருக்கும். இப்போதும் இவை இருக்கின்றன. ஆனால், இப்போது, அலுவலகத்தில் உயர் அதிகாரிகள் தங்கள் கீழ் பணியாற்றும் மற்றவர்களுடன் அலுவல் குறித்த தகவல்களை, டெக்ஸ்ட் மெசேஜ் அனுப்பிப் பெற்றுக் கொள்கின்றனர். எனவே, இதில் சரியான வகையில் டெக்ஸ்ட் அமைப்பதுவே பண்பான ஒன்றாகும். ஓர் உயர் அதிகாரிக்கு “lol wuts up boss?” என டெக்ஸ்ட் அனுப்புவது நல்ல நாகரிகமாகாது. அல்லது “can u come in a few hours early m8?” என அனுப்புவதும் தவறான ஒன்றாகும். மேலும் சிலர் கேப்பிடல் எழுத்துக்களைக் கொண்டு டெக்ஸ்ட் அமைப்பார்கள். இதுவும் தவறான பண்பாகும். தனிப்பட்ட நண்பர்கள் விடுத்து, மற்றவர்களிடம் டெக்ஸ்ட் மெசேஜ் பரிமாறிக் கொள்கையில், கேப்பிடல் லெட்டர்களாக இல்லாமல், முறையான வாக்கியங்கள் மூலம் டெக்ஸ்ட் அமைப்பதுவே சரியான பண்பாகும்.

6. எப்போதும் குற்றம் குறையா?

நம்மைச் சுற்றியுள்ள சிலர் எப்போதும் எதனையாவது குற்றம் குறை கூறிக் கொண்டே இருப்பார்கள். இவர்கள் தங்களைப் பற்றிய மோசமான பண்புப் பதிப்பினை மற்றவருக்குக் காட்டிக் கொண்டிருப்பவர்களாவர்கள். நிச்சயம் சுற்றி இருப்பவர்கள், இத்தகைய குணம் கொண்டபவர்களை வெறுப்பார்கள்; அல்லது விலகிச் செல்ல விரும்புவார்கள். சிலர் இணையத்திலும் இது போன்ற செயல்களிலும் ஈடுபடுவார்கள். அஞ்சல் குழுக்களில் இது போலச் செயல்பட்டால், சிலர் குழுக்களிலிருந்து தங்களை விலக்கிக் கொள்ளும் முடிவிற்குச் செல்வார்கள். தங்கள் வலை மனைகளில் இது போல எழுதுபவர்களின் எழுத்தைப் படிக்க ஆட்களே இருக்க மாட்டார்கள். எனவே, இணையத்தில், நம் கோபத்தினை என்றாவது ஒரு நாள், நாகரிகமாகக் காட்ட வேண்டுமோ ஒழிய, பண்பில்லாமல் தொடர்ந்து எழுதுவதனைத் தவிர்க்க வேண்டும்.

7. மனிதர்களைக் காட்டிலும் சாதனங்கள் முக்கியமல்ல

தொழில் நுட்பம் வளர்ந்துவிட்டதனால், அவை கொடுக்கும் வசதிகளைப் பயன்படுத்தும் போது நாம் நம்மை இழக்கிறோம். ஏனென்றால், நாம் டிஜிட்டல் சாதனங்களுக்கு அதிக மதிப்பு அளிக்கிறோம், மனிதர்களை இரண்டாவது இடத்தில் வைக்கிறோம். இந்த தவற்றினைத் திருத்திக் கொண்டால், நிச்சயம் நாம் பண்பாளர்களாகவே தொடர்ந்து இருப்போம்.

மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளவையோடு இன்னும் சில உறுத்தல் தரும் செயல்களையும் சிலர் இந்த சாதனங்களில் மேற்கொள்ளலாம். அவற்றை எல்லாம், அவர்களாகவே புரிந்து கொண்டு விலக்குவதே நல்லது.

வேர்ட் 2007ல் வாட்டர்மார்க்

வேர்ட்டில் டாகுமெண்ட்களைத் தயாரிக்கும் பலர், அதில் ஒரு வாட்டர்மார்க் அடையாளத்தை இணைப்பார்கள். டாகுமெண்ட்டிற்கு அடையாளம் தரும் வகையில் இது அமையும். நிறுவனத்தின் பெயர், டாகுமெண்ட்டினை தயாரிப்பவர் பெயர், டாகுமெண்ட்டின் தன்மை (ரகசியம், முதல் நகல், அனுமதிக்கப்பட்டது, போன்றவை) ஆகியவற்றில் ஒன்றை அமைப்பார்கள். இது டாகுமெண்ட்டின் பக்கம் முழுவதும் அமையும்படியாகவோ அல்லது டாகுமெண்டைத் தயாரிப்பவர் விருப்பப்படியோ, அதன் டெக்ஸ்ட் தன்மையைக் கெடுக்காமல் அமைக்கப்படும். இதனை வேர்ட் 2007 தொகுப்பில் எப்படி அமைக்கலாம் என்பதை இங்கு பார்ப்போம்.

வேர்ட் 2007 வாட்டர்மார்க் அமைக்க பல வழிகளைக் கொண்டுள்ளது. வாட்டர்மார்க் அமைக்க மாறா நிலையில், சில வழிகளைக் கொண்டிருந்தாலும், நம் விருப்பப்படியும் இதனை அமைக்கலாம். நாம் விரும்பும் டெக்ஸ்ட், எழுத்துரு, வண்ணம் என எதனை வேண்டுமானாலும் மாற்றி அமைக்கலாம்.

1. ரிப்பனில், "Page Layout" என்ற டேப்பில் கிளிக் செய்திடவும்.

2. "Page Background" குரூப்பில் "Watermark" என்ற கட்டளையில் கிளிக் செய்திடவும். இங்கு மாறா நிலையில் "CONFIDENTIAL 1", "DO NOT COPY", or "URGENT 1" ஆகிய வாட்டர்மார்க் அடையாளங்கள் கிடைக்கும். இதில் ஒன்றை நீங்கள் விரும்பினால் தேர்ந்தெடுக்கலாம். அல்லது, "Custom Watermark" என்ற பட்டனில் கிளிக் செய்திடவும். இப்போது "Printed Watermark" என்ற டயலாக் பாக்ஸ் கிடைக்கும்.

இங்கு பலவித ஆப்ஷன்கள் கிடைக்கும். இவற்றில் நீங்கள் விரும்பும் வகையில் உள்ளதைத் தேர்ந்தெடுக்கலாம்.

"No watermark" தேர்ந்தெடுத்தால், அப்போதைய வாட்டர்மார்க் நீக்கப்படும். இதே செயல்பாட்டினை, ரிப்பனில் உள்ள "Remove Watermark" என்ற ஆப்ஷனைத் தேர்ந்தெடுப்பதன் மூலமும் மேற்கொள்ளலாம்.

படம் ஒன்றை வாட்டர்மார்க்காக அமைக்க விரும்பினால், "Select Picture" என்ற பட்டனைத் தேர்ந்தெடுக்கவும். படத்தின் அளவை, விருப்பப்படி மாற்றி அமைக்க, "Scale" என்பதில் கிளிக் செய்திடவும். தேர்ந்தெடுத்தால், டெக்ஸ்ட்டை வாட்டர்மார்க்காக அமைக்கலாம். "Text" என்பதை அடுத்து நீங்கள் விரும்பும் டெக்ஸ்ட்டை அமைக்க வேண்டும். இதன்பின், டெக்ஸ்ட் வண்ணம் மற்றும் அது எப்படி அமைய வேண்டும் என்பதனை அமைக்க ஆப்ஷன்கள் கிடைக்கும். இவற்றை அமைத்த பின்னர், ஓகே அழுத்தி டயலாக் பாக்ஸை மூடவும். இனி டாகுமெண்ட்டில் நீங்கள் அமைத்த டெக்ஸ்ட் நீங்கள் அமைத்த விருப்பப்படி வாட்டர்மார்க்காக அமைக்கப்படும்.



கம்ப்யூட்டருக்கு புதியவரா?

பைல்களின் வகைகள்

.txt: இது மிக எளிமையான வேர்ட் ப்ராசசிங் டெக்ஸ்ட் பைலைக் குறிக்கிறது. இந்த வகை பைல்களில் பார்மட்டிங் விஷயங்கள் இருக்காது; எனவே Notepad உட்பட எந்த வகையான வேர்ட் ப்ராசசிங் சாப்ட்வேர் தொகுப்பிலும் இதனைத் திறக்கலாம்.

.rtf: ரிச் டெக்ஸ்ட் பார்மட் என அழைக்கப்படும் இந்த வகை பைல்களில் ஓரளவிற்கு டெக்ஸ்ட் பார்மட்டிங் இருக்கும். பார்மட்டைக் காட்டுகிற எந்தவித வேர்ட் ப்ராசசிங் தொகுப்பும் இதனைத் திறந்து காட்டும்.

*-**.doc: மைக்ரோசாப்ட் வேர்ட் தொகுப்பில் உருவாக்கப்படும் பைல்கள் அனைத்தும் இந்த துணைப் பெயருடன் கிடைக்கும். எனவே இந்த துணைப் பெயர் இருந்தால் வேர்ட் தொகுப்பைத் திறந்து பைலைத் திறக்கலாம்.

*-**.xls: எம்.எஸ். ஆபீஸ் தொகுப்பில் உள்ள எக்ஸெல் புரோகிராமில் உருவாகும் பைல்கள் இந்த துணைப் பெயருடன் அமைக்கப்படும். எனவே எக்ஸெல் புரோகிராம் அல்லது வேறு ஏதேனும் ஸ்ப்ரெட் ஷிட் புரோகிராம் ஒன்றில் தான் இதனைத் திறக்க முடியும்.

.ppt: விண்டோஸின் பிரிமியர் பிரசன்டேஷன் பேக்கேஜ் ஆன பவர் பாய்ண்ட் தொகுப்பில் உருவாகும் பைல்களுக்கு இந்த துணைப் பெயர் கிடைக்கும்.

.pdf: இந்த வகை பைலை அடோப் அக்ரோபட் ரீடர் அல்லது அதைப் போல வந்துள்ள பல புதிய புரோகிராம்களைக் (PDF Viewer) கொண்டு திறக்கலாம். Portable Document File என்று இதனை முழுமையாக அழைக்கிறார்கள். டெஸ்க் டாப் பப்ளிஷிங் மூலம் உருவாக்கப்பட்ட பைல்களை விநியோகம் செய்திட இந்த பைல் முறையைப் பலர் கையாளுகின்றனர். பைல் உருவான பாண்ட் இல்லாமல் டெக்ஸ்ட் பைலை அப்படியே படம் போல் பைலாக இது காட்டும். தற்போது இந்த வகை பைல்களை மீண்டும் டெக்ஸ்ட்டாக மாற்றுவதற்கும் புரோகிராம்கள் கிடைக்கின்றன. அடோப் அக்ரோபட் ரீடர் உட்பட இந்த வகை பைல்களைத் திறந்து படிக்கக் கூடிய புரோகிராம்கள் அனைத்தும் இலவசமாகக் கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது

-*-*-*-*-*-*-*-htm / html : ஒரு பைல் இவற்றில் ஏதாவது ஒன்றினைத் துணைப் பெயராகக் கொண்டிருந்தால் இது இன்டர்நெட்டில் பயன்படுத்த அமைக்கப்பட்டது என அடையாளம் கண்டு கொள்ளலாம். எனவே இதனை ஒரு வெப் பிரவுசர் புரோகிராமில் திறக்கலாம். விண்டோஸ் இயக்கத்தில் இதனைத் திறக்க இருமுறை கிளிக் செய்தால், அது இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தொகுப்பினைத் திறந்து இந்த பைலைக் காட்டும். அவ்வாறு காட்ட மறுத்தால் உங்கள் கம்ப்யூட்டரில் உள்ள வேறு வெப் பிரவுசர் மூலம் இதனைத் திறக்கலாம்.

.csv: ஒரு ஸ்ப்ரெட் ஷீட்டில் அமைக்கப்பட வேண்டிய தகவல்கள் காற்புள்ளிகள் என அழைக்கப்படும் கமாக்களால் பிரிக்கப்பட்டு பைலாக அமைக்கப்படுகையில் இந்த துணைப் பெயர் அந்த பைலுக்குக் கிடைக்கும். இதனை எக்ஸெல் புரோகிராமில் திறந்து பார்க்கலாம். அல்லது தகவல்களை சும்மா பார்த்தால் போதும் என எண்ணினால் எந்த வேர்ட் தொகுப்பு மூலமும் பார்க்கலாம்.

சுருக்கப்பட்ட பைல்கள்: கீழே பைல்களை சுருக்கித் தருகையில் கிடைக்கும் பைல் வகைகளின் துணைப் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

இவ்வாறு பைல்களைச் சுருக்கித் தருவதனை File compresseion என அழைக்கின்றனர். பைல்களின் அளவைச் சுருக்கி இணையம் வழி பரிமாறிக் கொள்ளவும் எடுத்துச் செல்லவும் இது அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

.zip: இந்த துணைப் பெயருடன் ஒரு பைல் உங்களுக்கு வந்தால் அது சுருக்கப்பட்ட பைல் என்று பொருள். இத்தகைய பைல்களை விரித்துக் காட்ட இணையத்தில் நிறைய புரோகிராம்கள் இலவசமாகக் கிடைக்கின்றன. இவற்றில் அதிகம் பயன்படுத்தப்படுவது விண்ஸிப் புரோகிராமாகும்.

--*-*-**.rar: இதுவும் சுருக்கப்பட்ட பைலின் ஒரு வகையாகும். இதனைத் திறக்க சில ஸ்பெஷல் புரோகிராம் தேவைப்படலாம். WinRar என்ற புரோகிராம் இந்த பணியை மிக அழகாகச் செய்து முடித்திடும்.

.cab: உங்கள் கம்ப்யூட்டரில் விண்டோஸ் இயக்கத்தில் ஏதேனும் புரோகிராம் ஒன்றை, எடுத்துக் காட்டாக வேர்ட் புரோகிராம், இன்ஸ்டால் செய்தால் விண்டோஸ் அந்த புரோகிராமினைப் படித்துத் தெரிந்து கொண்டு அதனை கேபினட் பைல் ஒன்றில் பதிந்து வைக்கும். அந்த வகை பைலின் துணைப் பெயர் தான் இது. இந்த பைலை நாம் படித்து அறிய வேண்டியது இல்லை. எனவே இதனைத் திறக்காமல் இருப்பதே நல்லது.

விண்டோஸ் 8 : டிபிராக் செயலைக் கட்டுப்படுத்த

விண்டோஸ் சிஸ்டத்தில், ஹார்ட் டிஸ்க்கில் பைல்கள் ஒரே சீராக ஒரே இடத்தில் எழுதப்பட மாட்டாது. டிஸ்க் பயன்பாட்டின் நாட்கள் செல்லச் செல்ல, பைல்கள் அழித்து அழித்து எழுதப்படுகையில், பைல்கள் சிதறலாக எழுதப்படும். இவற்றை ஒழுங்குபடுத்தி, ஒரே இடத்தில் அவை எழுதப்பட்டு அமைக்கப்படும் வழி தான் டிபிராக் ஆகும். இதனை நாமாக மேற் கொள்ளும் வகையிலேயே முன்பு வந்த விண்டோஸ் சிஸ்டங்கள் இருந்தன.

விண்டோஸ் 8 சிஸ்டத்தில் இது தானாக இயங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. விண்டோஸ் 8, தானாக ட்ரைவ்களை குறிப்பிட்ட கால இடைவெளியில், டிபிராக் செய்திடுவதை மாறா நிலையில் கொண்டுள்ளது. நம் ஹார்ட் டிஸ்க் புதியதாக இருந்தால், ஹார்ட் டிஸ்க் சாலிட் ஸ்டேட் டிஸ்க்காக இருந்தால், ட்ரைவ்களில் மிக அதிகமாக இடம் இருந்தால், இவற்றில் டிபிராக் மேற்கொள்வது தேவையற்ற ஒன்றாகும். எனவே இதனை நிறுத்தி விட்டு, சில டிஸ்க்குகளை டிபிராக் செய்வதிலிருந்து விலக்கி வைப்பதும், தேவைப்படும் போது சிலவற்றில் டிபிராக் செயல்பாட்டினை மேற்கொள்வதும் சரியான செயலாகும். இதனை எப்படி விண்டோஸ் 8 சிஸ்டத்தில் செட் செய்திடலாம் எனப் பார்க்கலாம். கீழே தரப்பட்டுள்ள குறிப்புகள், செட்டிங்ஸ் செய்வதற்கான ஒரு வழியைக் காட்டுகிறது. வேறு சில வழிகளும் இருக்கலாம்.

1. ஸ்டார்ட் மெனுவில் defrag என்று டைப் செய்திடவும்.

2. திரையின் வலது பக்கம் "Settings" என்பதில் கிளிக் செய்திடுக.

3. திரையின் இடது பக்கம், "Settings Results for defrag" என்பதற்குக் கீழே "Defragment and optimize your drives" என்று இருப்பதில் கிளிக் செய்திடவும்.

3. டெஸ்க்டாப்பில் "Optimize Drives" என்ற டயலாக் பாக்ஸ் திறக்கப்படும். இதில் "Change settings" என்ற பட்டனில் கிளிக் செய்திடவும்.

5. சிறிய "Optimize Drives" என்ற டயலாக் பாக்ஸ் திறக்கப்படும். "Drives" என்பதை அடுத்து "Choose" என்ற பட்டனில் கிளிக் செய்திடவும்.



6. மூன்றாவதாக, "Optimize Drives" என்ற டயலாக் பாக்ஸ் திறக்கப்படும். எந்த ட்ரைவ் தானாக டிபிராக் செய்யப்பட வேண்டுமோ, அவற்றைத் தேர்ந்தெடுக்கவும். மற்றவற்றில் உள்ள டிக் அடையாளத்தினை எடுத்துவிடவும். இதே போல, "Automatically optimize new drives" என்பதில் நம் விருப்பப்படி டிக் அடையாளத்தை அமைக்கலாம்.

7. "Ok" அல்லது "Close" மீது கிளிக் செய்து டயலாக் பாக்ஸ்களை மூடவும்.

தொழில் நுட்பம்

Taskbar: (டாஸ்க் பார்) விண்டோஸ் இயக்கத்தில் மானிட்டர் திரையில் கீழாக இயங்கும் நீள் கட்டம். இதில் ஸ்டார்ட் மெனு, விரைவாக அப்ளிகேஷன் புரோகிராம்களை இயக்க ஐகான்கள் அடங்கிய தொகுப்பு, இயங்கிக் கொண்டிருக்கும் அப்ளிகேஷன் புரோகிராம்களின் பைல்களுக்கான கட்டங்கள் மற்றும் கடிகாரம், பின்னணியில் இயங்கிக் கொண்டிருக்கும் புரோகிராம்களின் ஐகான்கள் ஆகியவை இருக்கும். இவற்றைத் தேவைப்படும் போது கிளிக் செய்து பெறலாம்.

எக்ஸெல் டிப்ஸ்

Shift+F11- புதிய ஒர்க்ஷீட்

எக்ஸெல் ஒர்க்புக்கில் புதிய ஒர்க்ஷீட் ஒன்றை இணைப்பது சில சமயம் பல இடங்களில் இழுபறி வேலை போல் இருக்கலாம். பல மெனுக்களில் சென்று அவற்றை இழுத்துப் பின் இன்ஸெர்ட் தேர்ந்தெடுப்பது நேரம் இழுக்கும் வேலையாக இருக்கலாம். இவற்றைத் தவிர்க்க ஒரு சிறிய ஷார்ட் கட் கீ உள்ளது. அதுதான் Shift+F11. இந்த இரண்டையும் அழுத்தினால் அப்போது இருக்கும் ஒர்க்ஷீட்டிற்கு முன் புதிய ஒர்க்ஷீட் ஒன்று இணைக்கப்படும்.

பேஜ் பிரேக் கோடு தெரிய

ஒரு எக்ஸெல் ஒர்க்ஷீட்டை பார்மட் செய்கையில் அதன் பிரிண்ட் அவுட்டில் பேஜ் பிரேக் எங்கு வரும் என்று தெரிவது நமக்கு முக்கியம். இதனை பிரிண்ட் பிரிவியூ ஆப்ஷன் சென்று பார்த்தால் தெரிய வரும். அல்லது Page Break Preview என்ற ஆப்ஷனைப் பெற்று பார்த்தாலும் தெரிய வரும். தொடர்ந்து ஒர்க்ஷீட்டினை எடிட் செய்தால் இந்த பேஜ் பிரேக் மாறுவதனை மீண்டும் மீண்டும் பார்த்து நாம் உறுதி செய்திட வேண்டும். எக்ஸெல் இந்த பேஜ் பிரேக்கினை இடைவெளிக் கோடாக நெட்டு வரிசை மற்றும் படுக்கை வரிசைகளின் ஊடாகக் கொடுக்கிறது. சில செட்டிங்ஸ் அமைப்பில் இந்த கோடு தெரியாமல் இருக்கலாம். அதனைச் சரி செய்திடக் கீழ்க்காணும் வழிகளைப் பின்பற்றலாம்.

1. Tools மெனு சென்று அதில் ஆப்ஷன்ஸ் செலக்ட் செய்திடவும். இங்கு Options டயலாக் பாக்ஸ் கிடைக்கும்.

2. இதில் View டேப்பினை செலக்ட் செய்திடவும். இதில் Page Breaks செக் பாக்ஸ் ஒன்றும் இருக்கும். இதில் ஒரு டிக் அடையாளம் ஏற்படுத்தவும்.

3. அதன்பின் ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

இனி பேஜ் பிரேக் கோடுகள் கிடைக்கும்.

எக்ஸெல் பேஸ்ட்

எக்ஸெல் தொகுப்பில் தகவல்களை பேஸ்ட் செய்திட கண்ட்ரோல்+வி அல்லது பேஸ்ட் பட்டனைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. ஒரு செல்லில் உள்ள தகவல்களை கண்ட்ரோல்+சி கொடுத்து காப்பி செய்திடுங்கள். பின் எந்த செல்லில் அவற்றை பேஸ்ட் செய்திட வேண்டுமோ அந்த செல்லில் கர்சரைக் கொண்டு செல்லுங்கள். பின் ஜஸ்ட் என்டர் தட்டுங்கள். ஆஹா! பேஸ்ட் ஆகிவிட்டதா உங்கள் தகவல்கள்.

செல்களைக் குழுவாகக் கட்டமிட

எக்ஸெல் தொகுப்பில் டேட்டாக்களைக் கொடுத்து பணியாற்றிக் கொண்டிருக்கையில் குறிப்பிட்ட செல்கள ஒரு குரூப்பாகக் கட்டம் கட்ட வேண்டும் என எண்ணுகிறீர்களா? அப்போது நீங்கள் கட்டமிட விரும்பும் செல்களை ஹைலைட் செய்து தேர்ந்தெடுத்து பின் Ctrl + Shift + - அழுத்துங்கள். அழகாகக் கட்டம் கட்டி காணப்படும். அதன்பின் கட்டமிட்ட செல்களில் பார்டரை எப்படி நீக்குவது என யோசிக்கிறீர்களா? முன்பு போலவே கட்டமிட்ட செல்களை ஹைலைட் செய்து தேர்ந்தெடுத்து பின் Ctrl + Shift + _ ஆகிய கீகளை அழுத்தவும். அனைத்து பார்டர்களும் காணாமல் போச்சா!

படுக்கை வரிசை இணைக்க

எக்ஸெல் ஒர்க்ஷீட்டில், புதிய படுக்கை வரிசைகளை குறிப்பிட்ட இடத்தில் இணைக்க நமக்கு வசதிகள் தரப்பட்டுள்ளன. எந்த வரிசையின் கீழாகக் கூடுதல் வரிசை வேண்டுமோ, அதனைத் தேர்ந்தெடுத்து, பின்னர் இன்ஸெர்ட் (Insert) மெனு சென்று, அதில் Rows தேர்ந்தெடுத்து கிளிக் செய்வோம். இதன் மூலம் ஒரே ஒரு வரிசை நமக்குக் கிடைக்கும்.

ஒன்றுக்கு மேற்பட்ட வரிசை வேண்டும் எனில் என்ன செய்கிறோம்? இதற்கு இரண்டு வழிகள் உள்ளன. மேலே கூறியபடி வரிசை ஒன்றை இணைத்த பின்னர், F4 பட்டனை அழுத்தினால், அடுத்தடுத்து வரிசைகள் இணைக்கப்படும்.

இன்னொரு வழி இதைக் காட்டிலும் எளிய வழியாகும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஐந்து வரிசைகள் இணைக்கப்பட வேண்டும் என விரும்பினால், அந்த வரிசை சென்று, தொடர்ச்சியாக ஏற்கனவே இருக்கும் ஐந்து வரிசைகளைத் தேர்ந்தெடுக்கவும். அடுத்து, இன்ஸெர்ட் (Insert) மெனு சென்று, அதில் Rows தேர்ந்தெடுத்து கிளிக் செய்திடவும். நீங்கள் தேர்ந்தெடுத்த முதல் வரிசைக்கு மேலாக, எக்ஸெல் ஐந்து வரிசைகளை இணைத்திருக்கும். இது சற்று வேடிக்கையாகக் கூடத் தோன்றலாம்.

வாய்ஸ் பைல் அனுப்பும் வாட்ஸ் அப்

மொபைல் சாதனங்களில் உடனுடக்குடன் செய்திகளை அனுப்புவதில், கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது, உலகெங்கும் பயன்படுத்தப்பட்டு, இவ் வகையில் முதல் இடம் பெற்றுள்ள, வாட்ஸ் அப், அண்மையில் இன்னும் ஒரு புதிய வசதியினை அதன் வாடிக்கையாளர்களுக்கு த் தந்துள்ளது. ஒருவருக்கொருவர் தங்கள் குரல் வழி செய்தியையும் இனி, வாட்ஸ் அப் மூலம் அனுப்பலாம். ''வாய்ஸ் மெசேஜ்'' என்று அழைக்கப்படும் இந்த வசதியை அறிமுகப்படுத்திய போதே, வாட்ஸ் அப் அப்ளிகேஷனைத் தொடர்ந்து பயன்படுத்தி வரும் 35 கோடி வாடிக்கையாளர்களின் சாதனங்களில் இந்த வசதி அப்டேட் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

ஐ போன், ஆண்ட்ராய்ட், பிளாக் பெரி, விண்டோஸ் போன் மற்றும் சிம்பியன் என அனைத்து வகை ஆப்பரேட்டிங் சிஸ்டங்களிலும், வாட்ஸ் அப் செயல்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. அண்மையில், ட்விட்டர் தளத்தில், வாட்ஸ் அப் வெளியிட்ட தகவலின் படி, ஒரு நாளில், 24 மணி நேர காலத்தில், 2,700 கோடி செய்திகளை, வாட்ஸ் அப் அனுப்பி சாதனை செய்தது. இன்னொரு வகை தகவலில், வாட்ஸ் அப், அனுப்பிய வகையில் 1,100 கோடி செய்திகளையும் , பெற்ற வகையில் 2,000

கோடி செய்திகளையும் செயல்படுத்தியுள்ளது. ஆக, மொத்தம் 3,100 கோடி செய்திகளைக் கையாண்டுள்ளது. ஒவ்வொரு நாளும், வாட்ஸ் அப் மூலம் 32 கோடியே 50 லட்சம் போட்டோக்கள் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

இந்தியாவில் வாட்ஸ் அப் அப்ளிகேஷனைத் தொடர்ந்து பயன்படுத்துவோர் எண்ணிக்கை 2 கோடி ஆகும். இதே போல 2 கோடி வாடிக்கையாளர்களை, வாட்ஸ் அப், ஸ்பெயின், ஜெர்மனி மற்றும் மெக்ஸிகோ ஆகிய நாடுகளில் பெற்றுள்ளது.

உலக அளவில், 45 நாட்கள் காலத்தில், ஏறத்தாழ 5 கோடி பேர் முதல் முறையாக வாட்ஸ் அப் அப்ளிகேஷனைப் பயன்படுத்தத் தொடங்கி உள்ளனர்.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வாய்ஸ் மெசேஜிங் மூலம், ஒருவர் தங்கள் குரலைப் பதிவு செய்திடலாம். உடனடியாக, அந்த வாய்ஸ் பைல் உரியவரை, மெசேஜ் செல்லும் அதே வேகத்தில் சென்றடைகிறது. பெறுபவர், உடனே அதனை இயக்கிக் குரல் வழி செய்தியைக் கேட்கலாம். அனுப்புபவர் மற்றும் பெறுபவரின் மொபைல் சாதனத்தில் இது பைலாக பதியப்படுவதால், எப்போது வேண்டுமானாலும், எத்தனை முறை வேண்டுமானாலும், வாய்ஸ் மெயிலை இயக்கிக் கேட்கலாம். இதனைப் பதிவு செய்திட, டெக்ஸ்ட் மெசேஜ் விண்டோவில், வலது பக்கம் உள்ள மைக் ஐகானை அழுத்திப் பேச வேண்டும். விரலை ஐகானிலிருந்து எடுத்தவுடன், வாய்ஸ் மெயிலாக இது செல்லும். வாய்ஸ் மெயிலை அனுப்ப வேண்டாம் என முடிவு செய்தால், இடது பக்கமாக ஸ்வைப் செய்தால், வாய்ஸ் மெசேஜ் அழிக்கப்படும். அனுப்பப்பட்ட வாய்ஸ் மெயிலைப் பெற்றவர் கேட்டு முடித்து விட்டால், வழக்கம் போல கூடுதல் டிக் அடை



யாளம் மூலம் அது தெரிவிக்கப்படுகிறது.

வாய்ஸ் மெசேஜைப் பெறுபவர் தன் போட் டோவுடன் அக்கவுண்ட்டைப் பதிந்து வைத்தி ருந்தால், அவருடைய படம், மெசேஜ் கால அளவு ஆகியவை காட்டப்படும். பெறுபவர் மெசேஜைக் கேட்டுவிட்டல், ஐகான் நீல நிறத் திற்கு மாறும்.

வாய்ஸ் மெசேஜைப் பெறும் ஒருவர், மெசேஜ் விண்டோவில் இருக்கும் ஐகான அழுத்தி, அனுப்பியவர் பதிந்த செய்தியைக் கேட்கலாம். இதற்கெனத் தனியே ஆடியோ பிளேயர் எதுவும் தனியே இயக்கப்பட மாட் டாது. வாட்ஸ் அப் அப்ளிகேஷனிலேயே குர லைக் கேட்கலாம்.

ஒரு வாய்ஸ் மெசேஜ் எவ்வளவு நேரம் பதி யப்படலாம் என்பதற்குக் கால அளவு என எத னையும் வாட்ஸ் அப் தரவில்லை.

இந்த வசதியையும் சேர்த்து, வாட்ஸ் அப் அப்ளிகேஷன் மூலம், டெக்ஸ்ட், போட்டோ, வீடியோ மற்றும் குரல் எனப் பல வழிகளில் நண்பர்கள் தங்களுக்குள் எளிதாகவும் விரைவா கவும் பரிமாறிக் கொள்ள முடிகிறது.

இதே போன்றதொரு அப்ளிகேஷன் ஒன்றை, இந்திய நிறுவனமான பாரதி சாப்ட்பேங்க், ஹைக் (Hike) என்ற பெயரில் ஏற்கனவே வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் அப்ளிகே ஷனை 50 லட்சத்திற்கும் மேலானவர்கள் பயன் படுத்தி வருகின்றனர். சீனாவின் டென்சென்ட் நிறுவனம் WeChat என்ற பெயரில் ஓர் அப்ளிகே ஷனைத் தந்து வருகிறது.

தெரிஞ்சுக்கலாமா!

ஏதேனும் ஒரு பைல், போல்டர் என ஒன்றை செலக்ட் செய்து பின் Alt + Enter அழுத்தினால் அது குறித்த தகவல்கள் தரப்படும் Properties விண்டோ கிடைக் கும். அந்த பைல், போல்டர் அல்லது டிரைவ் குறித்து அனைத்து தகவல்களை யும் தெரிந்து கொள்ளலாம்.

ஈதர்நெட் (Ethernet)என்பது ஸெராக்ஸ் நிறுவனத்தின் ட்ரேட் மார்க். அதே போல யூனிக்ஸ் என்பது AT&T நிறுவனத் தின் ட்ரேட் மார்க்.

வாட்ஸ் அப் அப்ளிகேஷனைப் பொறுத்த வரை, இந்நிறுவனம் இதற்கென எந்த விளம்ப ரத்தினையும் வெளியிட்டதில்லை. மெசேஜ் அனுப்புவதில் இதன் எளிமையும் வேகமும் மட்டுமே, பல கோடிக்கணக்கானவர்களை இத னைப் பயன்படுத்த வைத்துள்ளது. வாட்ஸ் அப் ஒரு குறையை மட்டும் விட்டு வைத்துள்ளது. படங்களை அனுப்புகையில் அதற்கான குறிப்பு களைத் தனி மெசேஜாகத்தான் அனுப்ப முடிகி றது. அதாவது ஒரு படத்தை அனுப்பிய பின்னர், அதற்கான குறிப்பினை தனியே இன் னொரு மெசேஜாகத்தான் அனுப்ப முடியும். விரைவில் வாட்ஸ் அப் இந்தக் குறையை நீக் கும் என எதிர்பார்க்கலாம்.



இந்த வார இணைய தளம்

இயந்திரங்களின் இயக்கம் அறிய

பொதுவாகவே, ஒரு இயந்திரம் எப்படி இயங்குகிறது என்பதைக் காண அனைவருக்கும் ஆர்வம் இருக்கும். நம் உடம்பின் உள்ளே என்னதான் நடக்கிறது, இந்த இயந்திரமும் எப்படி இயங்குகிறது என்பதைக் காணவும் நமக்கு ஆர்வம் தான். இதே ஆர்வத்துடன் அண்மையில் ஓர் இணையதளத்தைக் காண நேர்ந்தது. உடம்பின் இயக்கம் குறித்து தகவல் அல்லது படக் காட்சி இல்லை என்றாலும், 21 வகை இஞ்சின்கள் குறித்தும், அவை இயங்குவது குறித்தும், தகவல்களும், நகரும் படக் காட்சிகளும் தரப்படுகின்றன. இந்த செயல்பாட்டிற்கேற்ற வகையில், இந்த தளத்தின் பெயர் Animated engines எனத் தரப்பட்டுள்ளது. இந்த தளத்தின் முகவரி http://www.animatedengines. com/.

இந்த தளத்தில் தகவல்களைத் தேடிப் பெறுவது மிக மிக எளிதாக்கப்பட்டுள்ளது. நீங்கள் இயக்கம் காண விரும்பும் இஞ்சினைத் தேர்ந்தெடுத்து, கிளிக் செய்தால் போதும். உடனே, அந்த இஞ்சின் குறித்து படமும் தகவல்களும் உள்ள தளத்திற்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள். முதலில், அந்த இஞ்சின் குறித்த பொதுவான மற்றும் தொழில் நுட்ப தகவல்கள் தரப்படுகின்றன. பின்னர் இயக்கம் காட்டப்படுகிறது. இன்னும் கீழாகச் சென்றால், இயக்கத்தின் ஒவ்வொரு நிலையும் காட்டப்பட்டு விளக்கப்படுகிறது. இதில் வேடிக்கையும், அதே நேரத்தில் சிறப்பான அம்சமும் என்னவென்றால், இஞ்சின் இயக்கம் காட்டப்படும் தளத்தின் மேலாக, இடது வலதாக இரண்டு அம்புக் குறிகள் உள்ளன. இவற்றை அழுத்தி, இயக்கத்தினை மெதுவாகவும், விரைவாகவும் அமைத்து ரசிக்கலாம். இதன் மூலம், ஓர் இஞ்சின் எப்படி இயங்கத் தொடங்கி, படிப்படியாக எப்படி முழுமையான இயக்கத்திற்கு வருகிறது என்பதனைத் தெளிவாக அறியலாம்.

சிறுவர்கள், ஒவ்வொரு இஞ்சினாக, அவர்கள் வாழ்க்கையில் அறிமுகமாகும் போது, இந்த தளத்தைக் காட்டி, அவற்றின் இயக்கம் குறித்து கற்றுக் கொடுக்கலாம். நாமும் அறிந்து கொள்ளலாம்.



வேர்ட் டிப்ஸ்

வேர்டில் கண்ட்ரோல் கட்டளைகள்

Ctrl+a: டாகுமெண்ட் முழுவதையும் தேர்ந்தெடுக்க.

Ctrl+b: அழுத்தமான (Bold) வடிவில் எழுத்தமைக்க.

Ctrl+c: தேர்ந்தெடுத்ததை, கோப்பினை நகலெடுக்க (Copy).

Ctrl+d: ஓர் எழுத்தின் (font) வடிவை மாற்றி அமைக்க.

Ctrl+e: நடுவே டெக்ஸ்ட் அமைக்க.

Ctrl+f:குறிப்பிட்ட சொல் அல்லது டெக்ஸ்ட் அமைந்துள்ள இடத்தைக் கண்டறிந்து, அதன் இடத்தில் வேறு ஒரு சொல் அமைக்க. மீண்டும் தேடலைத் தொடர Alt+Ctrl+y.

Ctrl+g: ஓரிடம் செல்ல.

Ctrl+h: (ஒன்றின் இடத்தில்) மற்றொன்றை அமைத்திட (Replace).

Ctrl+i: எழுத்து / சொல்லை சாய்வாக அமைக்க .

Ctrl+j: பத்தி ஒன்றை இருபக்கமும் சீராக, நேராக (Justify) அமைக்க.

Ctrl+k: ஹைப்பர் லிங்க் ஒன்றை ஏற்படுத்த.

Ctrl+l : பத்தி ஒன்றை இடது பக்கம் சீராக நேராக அமைக்க.

Ctrl+m: பத்தியினை இடதுபுறமாக சிறிய இடம் விட.

Ctrl+n: புதிய டாகுமெண்ட் உருவாக்க.

Ctrl+o: டாகுமெண்ட் ஒன்றைத் திறக்க.

Ctrl+p: டாகுமெண்ட் ஒன்றை அச்சடிக்க

Ctrl+q: பத்தி அமைப்பை நீக்க.

Ctrl+r: பத்தியினை வலது புறம் சீராக, நேராக அமைக்க.

Ctrl+s: தானாக, டாகுமெண்ட் பதியப்பட (Auto save).

Ctrl+t: பத்தியில் இடைப்பட்ட இடத்தில் இடைவெளி (Hanging) அமைக்க.

Ctrl+u: டெக்ஸ்ட்டில் அடிக்கோடிட.

Ctrl+v: தேர்ந்தெடுத்ததை ஒட்டிட.

Ctrl+w: டாகுமெண்ட்டை மூடிட.

Ctrl+x: தேர்ந்தெடுத்ததை அழிக்க, நீக்கிட.

Ctrl+y: இறுதியாக மேற்கொண்ட செயல் பாட்டினை மீண்டும் மேற்கொள்ள.

Ctrl+z: இறுதியாக மேற்கொண்ட செயல்பாட்டிற்கு மாறாக மேற்கொள்ள.

கர்சர் நகர்த்தல்

வேர்ட் டாகுமெண்ட் ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் கர்சரை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் திரையின் தொடக்கத்திற்குக் கொண்டு செல்ல எண்ணுகிறீர்கள். அதாவது திரையில் தெரியும் டெக்ஸ்ட் ஸ்கிரீன் நகரக் கூடாது. தெரிகின்ற வாக்கியங்களில் முதல் வாக்கியத்திற்குச் செல்ல வேண்டும். என்ன செய்திடலாம்? Home அழுத்தினால் வரியின் தொடக்கத்திற்கு மட்டுமே செல்லும். Ctrl + Home அழுத்தினால் அந்த ஆவணத் தின் தொடக்கத்திற்குச் செல்லும். திரையில் தெரியும் முதல் வாக்கியத்தின் தொடக்கத் திற்குச் செல்ல Alt + Ctrl + Page Up அழுத்திப் பாருங்கள். அதே போல் திரையில் தெரியும் பக்கத்தின் கீழ்ப்பாகத்திற்குச் செல்ல Alt + Ctrl + Page Down அழுத்தவும். வேர்ட் டாகுமெண்ட்டில் வேகமாக நினைத்த இடத்திற்கு நீந்திச் செல்ல விரல் நுனியில் உள்ள சூட்சுமத்தைத் தெரிந்து கொண்டீர்களா!

பாரா நகர்த்தல்

சில வேளைகளில் நாம் உருவாக்கும் வேர்ட் டாகுமெண்ட்டில் ஏதேனும் ஒரு முழு பாராவை டாகுமெண்ட்டின் வேறு இடத்தில் அமைக்க விரும்புவோம். இதற்கு காப்பி அல்லது கட் மற்றும் பேஸ்ட் கட்டளை எல்லாம் வேண்டாம். எந்த பாராவினை நகர்த்த வேண்டுமோ அதனுள்ளாக கர்சரைக் கொண்டு சென்று வைக்கவும். பின் ஷிப்ட் மற்றும் ஆல்ட் கீகளை அழுத்தியவாறு அப் ஆரோ அல்லது டவுண் ஆரோவினை அழுத்தினால் பாரா மேலே கீழே முழுதாகச் செல்லும்.

மொபைல் போன் டிப்ஸ்

ஒவ்வொரு மொபைல் வாங்கி இயக்கத் தொடங்கியவுடன் *#06# என்ற எண்ணை அழுத்தி அதன் தனி அடையாள எண்ணைத் ((International Mobile Equipment Identity)) தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மொபைல் போனுக்கான வாரண்டி இதனைச் சார்ந்ததாகும். மேலும் உங்கள் மொபைல் தொலைந்து போனால் இந்த எண்ணைக் கொண்டு தேடிக் கண்டுபிடிக்கலாம்.

உங்கள் நெட்வொர்க்கினைத் தாண்டி விட்டீர்களா? மொபைல் போனை ஆப் செய்வது நல்லது. அல்லது பேட்டரி பவர் வீணாகும்.

பழைய போன்களுக்கு

நோக்கியா லூமியா விலையில் தள்ளுபடி

தன்னுடைய லூமியா 520 மற்றும் லூமியா 620 போன்களை வாங்கத் திட்டமிடுபவரின் பழைய மொபைல் போன்களை வாங்கிக் கொண்டு, விலையில் தள்ளுபடி தரும் திட்டத்தினை நோக்கியா அறிவித்துள்ளது.

ஏற்கனவே இந்த போன்களின் விலை, சந்தையில் நிலவும் போட்டியின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும், இந்த தள்ளுபடி திட்டத்தினையும் நோக்கியா கொண்டு வந்துள்ளது.

இதன்படி, மேலே சொல்லப்பட்ட இரு ஸ்மார்ட் போன்களை வாங்க விரும்புபவர்கள், தங்களின் பழைய மொபைல் போன்களைக் கொண்டு வந்து விலையில் தள்ளுபடி பெறலாம்.

1. லூமியா 520 வாங்க, தள்ளுபடி விலைக்குத் தகுதியான போன்களாக, நோக்கியா ஆஷா 305, 306, 308, 309, 311, லூமியா 510, 610, 710, 800, நோக்கியா 206, இ5, இ71 மற்றும் இ72 ஆகிய நோக்கியா போன்கள் மற்றும்,

1.1சாம்சங் காலக்ஸி ஒய், ஒய் டூயோஸ், காலக்ஸி பாக்கெட் டூயோஸ், எஸ் டூயோஸ், காலக்ஸி சேட், மியூசிக் டூயோஸ், ஏஸ், ரெக்ஸ் 80, ரெக்ஸ் 90.

1.2 சோனி எக்ஸ்பீரியா இ, மினி, நியோ, டிபோ

1.3 மைக்ரோமேக்ஸ் ஏ 87, கேன்வாஸ்2, கேன்வாஸ் எச்.டி.

1.4 எல்.ஜி. குக்கி.

2. லூமியா 620 வாங்க தள்ளுபடிக்குத் தகுதியான மொபைல் போன்கள்:

2.1. நோக்கியா ஆஷா 308, 311, லூமியா 510,610,710,800, இ 72, என்8.

2.2.சாம்சங்: நியோ, காலக்ஸி பாக்கெட் டூயோஸ், ஒய் டூயோஸ், மியூசிக் டூயோஸ், ஏஸ், ரெக்ஸ் 90, எஸ் டூயோஸ், காலக்ஸி யங்.

2.3. பிளாக் பெரி: 8520, 9520, 9300.

2.4. சோனி: எக்ஸ்பீரியா, மினி, நியோ, டிபோ

2.5. எச்.டி.சி:டிசையர் சி, டிசையர் வி

2.6. மைக்ரோமேக்ஸ்:கேன்வாஸ் 2, கேன்வாஸ் எச்.டி.

தள்ளுபடி பெற இந்த போன்களைக் கொண்டு செல்கையில், நீங்கள் தரும் பயன்படுத்திய மொபைல் போன் உங்களுடையதுதான் என்பதற்கான சான்றினைக் கொண்டு செல்ல வேண்டும். போனின் செயல் தன்மைக்கேற்றபடி, ரூ. 4,000 முதல் ரூ. 6,000 வரை தள்ளுபடி கிடைக்கலாம்.

செப்டம்பரில் ஐபோன் 5 எஸ்

ஆப்பிள் நிறுவனத்தின் அடுத்த பெருமைக்குரிய மொபைல் போனாகிய ஐபோன் 5 எஸ், வரும் செப்டம்பர் 10ல் வெளியிடப்படக் கூடும் என்று தெரிய வந்துள்ளது. இத்துடன், குறைவான விலையிடப்பட்ட ஐபோன் மாடல் ஒன்றும் வெளியாகும் எனத் தெரிகிறது. இது ஐபோன் 5 சி என அழைக்கப்படலாம்.

ஐபோன் 5 எஸ் மாடலில், அதன் ஹோம் பட்டனில், கை விரல் ரேகைக்கான ஸ்கேனர் அமைக்கப்படலாம். இதன் கேமரா விநாடிக்கு 120 பிரேம்களைப் பதியும் வேகம் கொண்டதாக இருக்கும். தற்போதைய ஐபோன் கேமராக்கள், விநாடிக்கு 30 பிரேம் பதியும் திறன் கொண்டுள்ளன. இதனால், புதிய போனைக் கொண்டு ஸ்லோ மோஷன் திரைப்படங்களைக் கூடப் பதியலாம்.

ஆப்பிள் ஐபோன் சி, விலை மலிவான பிளாஸ்டிக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனாலேயே இதன் விலையைக் குறைக்க முடிகிறது. தற்போது விலை குறைந்த மற்றும் மத்திய நிலையில் விலையிட்டுள்ள, ஸ்மார்ட் போன்களே, மொபைல் சந்தையில் கோலோச்சிக் கொண்டுள்ளன. இதனாலேயே, குறைவான விலையில் மாடல் ஒன்றைக் கொண்டு வருவதில் ஆப்பிள் குறியாய் உள்ளது.

இந்த விலை குறைவான மாடல் மூலம், மொபைல் சந்தையில், தன்னுடைய ஸ்மார்ட் போனைப் பெரும்பாலான மக்களிடம் கொண்டு சேர்க்க முடியும் என ஆப்பிள் நிறுவனம் எதிர்பார்க்கிறது. இன்னும் ஒரு மாத காலம் இருப்பதால், நாம் காத்திருந்து இந்த இரண்டு மாடல்களும் என்ன தகவல்களைக் கொண்டு வர இருக்கின்றன என்று பார்க்கலாம்.

ஒன்பது இந்திய மொழிகளில் சாம்சங் அப்ளிகேஷன்கள்

தங்களுடைய காலக்ஸி ஸ்மார்ட் போன்களிலும், டேப்ளட் பிசிக்களிலும், ஒன்பது இந்திய மொழிகளில், அப்ளிகேஷன்கள் கிடைக்கும் என சாம்சங் அறிவித்துள்ளது. இந்த ஒன்பது மொழிகளில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி மற்றும் குஜராத்தி அடங்கும். இதனால், ஸ்மார்ட் போன் பயனாளர்கள், இந்த போன்களில் இடைமுகத்தினைத் தங்கள் மொழிகளிலேயே பெற்று, எளிதாக வேலைகளை மேற்கொள்ளலாம். முதலில் காலக்ஸி கிராண்ட், காலக்ஸி எஸ்4 மற்றும் காலக்ஸி டேப் 3 ஆகியவற்றில், ஆகஸ்ட் 13 முதல் இந்த சேவை வழங்கப்படுகிறது.

பொழுது போக்கு, வர்த்தகம், கேம்ஸ், பாரத் மேட்ரிமனி, இந்தியா ப்ராப்பர்ட்டி, டைம்ஸ் ஆப் இந்தியா, மும்பை ஸ்டாக் எக்சேஞ்ச் ஆகியவற்றைத் தங்கள் மொழிகளில் சென்று காணலாம். ஏற்கனவே சில சேவைகள் வட்டார மொழிகளில் உள்ளன. பேஸ்புக் மற்றும் பேஸ்புக் மெசஞ்சர் ஆகியவை சில குறிப்பிட்ட போன்களில் மாநில மொழிகளில் கிடைக்கின்றன. Reverie language Technologies என்னும் நிறுவனம், Reverie PhoneBook என்ற அப்ளிகேஷனைத் தருகிறது. இதனைத் தமிழ் உட்பட பல மொழிகளில் பயன்படுத்தலாம். சாம்சங் அப்ளிகேஷன் ஸ்டோரில் இது கிடைக்கிறது. வரும் டிசம்பர் வரை இது இலவசமாகக் கிடைக்கும் என இந்நிறுவனத் தலைமை அதிகாரி கூறியுள்ளார். தொடர்ந்து மற்ற போன்களிலும் இந்த மாநில மொழி பயன்பாட்டினை, சாம்சங் தர இருக்கிறது.

அமோகமான ஆண்ட்ராய்ட் பயன்பாடு

ஸ்மார்ட் போன் பயன்பாடு தொடர்ந்து வேகமாக உயர்ந்து வருகிறது. இதன் வளர்ச்சியில் லாபம் அடைவது ஆண்ட்ராய்ட் ஆப்ப ரேட்டிங் சிஸ்டம் தான். அண்மையில், ஐ.டி.சி. வெளியிட்ட அறிக்கையின் படி, 2013 ஆம் ஆண்டின், ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலத்தில், ஆண்ட்ராய்ட் சிஸ்டம் கொண்ட போன் விற்பனை 73.5 சதவீதம் உயர்ந்து, 18 கோடியே 70 லட்சத்தினை எட்டியது. மொத்த ஸ்மார்ட் போன்களில், ஆண்ட்ராய்ட் சிஸ்டம், 79.3 சதவீத போன்களில் பயன்படுத்தப்படுகிறது. இந்த வளர்ச்சிக்கு, சாம்சங் நிறுவனத்தின் ஸ்மார்ட் போன்கள் பெரும் அளவில் உதவி செய்துள்ளன. இந்நிறுவனம் மட்டும், சென்ற மூன்று மாதங்களில், 7 கோடியே 20 லட்சம் ஆண்ட்ராய்ட் போன்களை விற்பனை செய்துள்ளது.

PERSONAL BREAK

இணையத்தின் தீமைகளிலிருந்து சிறுவர்களைக் காப்பாற்றுவது என்பது இன்று இயலாத காரியமாக உள்ளது. இந்நேரத்தில் நல்ல வழிகளை யும், அறிவுரைகளையும் பக்குவமாகத் தங்கள் கட்டுரையில் எடுத்துக் கூறியுள்ளீர்கள். மிக்க நன்றி.

கே. ஆராவமுதன், மதுரை.

சமூக வலைத்தளங்களிலிருந்து சிறுவர்களைக் காப்பாற்றுவதுதான் மிகவும் கடினமான செயலாக உள்ளது. இன்னும் கூடுதலான குறிப்புகளை இதற்கெனத் தனியே வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்.சி. ரஞ்சிதம், கோவை.

வி.எல்.சி. பிளேயர் இயக்கினால், லேப்டாப் கம்ப்யூட்டரில் ஸ்பீக்கர் கெட்டுப் போய்விடுவதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. இது உண்மையா? இது குறித்து டிப்ஸ்களை வழங்கவும்.

டி.என். சேது சுப்ரமணியம், சென்னை.

ஒரு பக்கமே ஆனாலும், எஸ்.டி. கார்ட்கள் குறித்து, இது வரை அறியாத பல தகவல்களைத் தந்துள்ளீர்கள். மிகவும் அருமை. எழுதிய வருக்குப் பாராட்டுக்கள்.

எஸ். டேவிட் ஆசீர்வாதம், புதுச்சேரி.

கூகுள் ஸ்டோரில் எப்படி, பாதகமான அப்ளிகேஷன்களை அனுமதிக்கிறார்கள்? அஞ்சல் தளமான மெயில் தளத்தில், இணைப்புகள் எல்லாம் சோத்னைக்கு ஆளான பின்னர் தானே கிடைக்கின்றன. அதே நடைமுறையை ஏன் கூகுள் பிளே ஸ்டோரிலும் அமல்படுத்தக் கூடாது. நாம் பயப்படாமல், அப்ளிகேஷன்களை டவுண்லோட் செய்திட இது உதவுமே. நீங்கள் இதனை வலியுறுத்தவும்.

என். சுதர்சனம், கோவை.

யானைக்கும் அடி சறுக்கும் என்பது, மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் ஸ்கை ட்ரைவ் பெயரில் உறுதியாகியுள்ளது. மைக்ரோசாப்ட் இனி எந்த பெயர் கொண்டு இதனை அழைக்கப் போகிறது எனப் பார்க்கலாம்?

கே.எஸ். பிரகாசம், மதுரை.

வேர்ட் மினி டூல் பார் ஒரு எரிச்சல் சமாச்சாரமாக இருக்கிறது. இருந்தாலும், அதன் பயன்பாடு பல வழிகளில் உதவியாகவே உள்ளது. இதனை நிறுத்த தாங்கள் குறிப்பிட்டுள்ள வழியும் பயன் தரத்தக்கதே. தேவைப்படாதவர்களுக்கு இது நிச்சயம் உதவும்.

சி. கே. வெங்கடேஷ், பழநி.

கம்ப்யூட்டர் மாற்றிக் கொள்பவர்களுக்கு உதவிடும் வகையில் ஆட்டோ கரெக்ட் பேக் அப் வழிகள் தந்திருக்கிறீர்கள். ஒவ்வொரு முறை கம்ப்யூட்டர் மாறுகையிலும், நாமாக ஏற்படுத்திய மாற்றங்களை மீண்டும் மீண்டும் அமைத்து நேரத்தை வீணடிக்க வேண்டியதில்லை. நன்றி.

ஆர். சுரேஷ் கண்ணன், திண்டுக்கல்.

டோட்டல் அன் இன்ஸ்டால் புரோகிராம், மிகவும் உதவியாக உள்ளது. இதன் தொழில் நுட்பம் உண்மையிலேயே, மற்ற வற்றிடமிருந்து வேறுபட்ட வகையில் உள்ளது. நன்றி.

கே. எம். நிரஞ்சன் தாஸ், நாகர்கோவில்.

கேள்வி பதில் பகுதியில் தந்துள்ள கிட்ஸ் ஹெல்த், குழந்தைகள் வளர்ப்பில், நல்ல குறிப்புகளைத் தந்து வழி நடத்துகிறது. இதே போல சிறுவர், சிறுமியர் கல்வி கற்றுக் கொள்வதில் உதவும் தளம் ஒன்றினைச் சுட்டிக் காட்டி குறிப்புகள் தரவும்.

என். சாந்தி, சென்னை.

எக்ஸெல் செல்களில் ஏற்படும் தேவையற்ற இடைவெளிகளை நீக்க தந்துள்ள டிப்ஸ் மிக அருமை. இதுவரை இந்த பிரச்னையால், என் ஒர்க் புக் நன்றாக இல்லையே எனக் கவலை பட்டுக் கொண்டிருந்தேன். நீங்கள் தரும் ஒவ்வொரு டிப்ஸும் இது போல எங்கள் பிரச்னைகளை முன்கூட்டியே அறிந்தவர் போலவே தருகிறீர்கள். நன்றி.

கா. இளவரசி, சேலம்.

யு.எஸ்.பி. ட்ரைவ் செயல்பாட்டின் தகவல் பரிமாறும் வேகத்தினைப் பார்த்தால், அடுத்து ஹார்ட் டிஸ்க்கே இல்லாமல், ஒவ்வொரு செயல் பாட்டிற்கும் ஒரு ப்ளாஷ் ட்ரைவ் வைத்துப் பயன்படுத்தும் காலம் வரும் என நினைக்கிறேன். தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி எங்கோ செல்லும் என நீங்கள் அடிக்கடி குறிப்பிடுவது, உண்மையாகி வருகிறது.

பி. கஜேந்திரன், சென்னை.

கேள்வி: ட்ரேஸ் ரூட் (Traceroute) என்பது இணைய இணைப்பில் எந்த சாதனத்தைக் குறிக்கிறது? ரௌட்டரையா அல்லது அதன் இணைப்பில் இயங்கும் வேறு டிஜிட்டல் சாதனத்தையா?

ஏ. ஆகாஷ் குமார், சென்னை.

பதில்: Traceroute ஒரு சாதனம் அல்ல. இணைய இணைப்பில் பயன்படுத்தப்படும் ஒரு டூல். நெட்வொர்க் இயங்கும் தன்மை, அது குறித்த தகவல்களை, இந்த டூலைப் பயன்படுத்திப் பெறலாம். இதன் பெயர் சொல்வது போல, இணைய இணைப்பில் டேட்டா பாக்கெட்கள் மேற்கொள்ளும் பயணம் குறித்து இது கண்டறிந்து நமக்கு தகவல்களாகக் கொடுக்கும். இந்த கட்டளை எந்த கம்ப்யூட்டரிலிருந்து கொடுக்கப்படுகிறதோ, அதிலிருந்து இணைப்பிற்கு அது இலக்கு வைக்கும் கம்ப்யூட்டர் வரையிலான டிஜிட்டல் பாதையில் ஏற்படும் பயண விபரங்களை இது தரும். தகவல் பாக்கெட்கள் பயணிக்கையில், ஒவ்வொரு நிலையிலும் அது செல்லும் தூரம், நெட்வொர்க் பயணத்தில் சந்திக்கும் வெவ்வேறு சாதனங்கள் ஆகியன இதன் மூலம் அறியப்படும். Ping கட்டளை மூலம் பயன்படுத்தப்படும் டூல், இதே போன்ற தகவல்களைத் தந்தாலும், இணைய இணைப்பின் மொத்த தூரத்தினை அறிவிக்கும் பணியோடு அது நின்றுவிடுகிறது. இரண்டு டூல்களும், நெட்வொர்க்கில் குறிப்பிட்ட கம்ப்யூட்டர் அணுகப்படுகிறதா அல்லது இணைப்பில் வருமா என்பதனை அறிவித்தாலும், ட்ரேஸ் ரூட் டூல், இணைப்பு கேட்கும் கம்ப்யூட்டரிலிருந்து, இணைப்பு நாடும் கம்ப்யூட்டர் வரையிலான பாதையில், எந்த இடத்தில் இணைப்பு வேகம் குறைவாக உள்ளது அல்லது இணைப்பு ஏற்படுத்த முடியாமல் உள்ளது என்று காட்டும்.

கேள்வி: நான் பயன்படுத்தும் விண்டோஸ் 7 சிஸ்டத்தில் கிடைக்கும் ஆன் ஸ்கிரீன் கீ போர்டில், நியுமெரிக் கீ போர்டு தனியே இல்லை. எண்களை அதிகம் பயன்படுத்துவதால், எண்களுக்கான நியூமெரிக் கீ போர்டு கிடைக்க என்ன செய்திட வேண்டும்?

சா. வெண்மதி, புதுச்சேரி.

பதில்: நீங்கள் கூறுவது சரியே. விண்டோஸ் 7 சிஸ்டம் தரும் விர்ச்சுவல் ஆன் ஸ்கிரீன் கீ போர்டில் எழுத்துக்களுக்கு மேலே ஸ்பெஷல் கேரக்டருடன் இணைந்த எண்கள் கீ போர்டு மட்டுமே தரப்படுகிறது. இதற்குக் காரணம், குறைவான பிக்ஸெல்களுடன் கீ போர்டு காட்சி அளிக்க வேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி 28, 30 , 10 போன்ற எண்கள் அமைப்பது சற்று நேரம் எடுக்கும் செயல்பாடாக அமைகிறது.

நீங்கள் விரும்பும் வகையில், தனியாக கீ போர்ட் கொண்ட ஆன் ஸ்கிரீன் கீ போர்டினை நாம் அமைக்கலாம். கீழே தரப்பட்டுள்ளபடி செயல்படவும்.

1. "OnScreen Keyboard"ல், வலது பக்கம் உள்ள "Options" என்னும் பட்டனைக் கிளிக் செய்திடவும். இது "PrtScn" என்ற கீக்குக் கீழாக இருக்கும்.

2. இங்கு ஆப்ஷன்ஸ் டயலாக் பாக்ஸ்



கிடைக்கும். இதில் "Turn on numeric key pad" என்று உள்ள இடத்தில் டிக் அடையாளத்தை ஏற்படுத்தவும். பின்னர், ஓகே கிளிக் செய்து டயலாக் பாக்ஸை மூடவும். அடுத்து கிடைக்கும் விர்ச்சுவல் கீ போர்டில், "NumLock" பட்டனை அழுத்தி, எண்களுக்கான கீ பேடினைப் பெறலாம்.

கேள்வி: என் கம்ப்யூட்டரில் விண்டோஸ் 7 சிஸ்டம் பதிந்தவர், கேப்ஸ் லாக், நம் லாக் அழுத்துகையில் ஒலி ஏற்படும் வகையில் அமைத்துவிட்டார். இது வசதியாக இருந்தாலும், இந்த ஒலி முன்பு போல் இல்லாமல், மிகவும் சத்தமாக இருப்பதால், இதனை நீக்க விரும்புகிறேன். எப்படி செட் செய்வது?

என். ஸ்ரீராம் ஜெகதீஷ், மதுரை.

பதில்: நீங்கள் குறிப்பிடுவது சரியே. இந்த கீகளை அழுத்துகையில் ஒலி ஒலிக்கும் படி செய்தால், கிடைக்கும் ஒலி, ஏற்கனவே இருந்த சிஸ்டங்கள் தந்த ஒலியைக் காட்டிலும் சற்று வித்தியாசமாகவும் உரக்கவும் உள்ளது. இவற்றைத் தேவை இல்லை எனில், நீக்கிவிடலாம். கீழே குறிப்பிட்டுள்ளபடி செட்டிங்ஸ் ஏற்படுத்தவும்.

1. ஸ்டார்ட் பட்டன் அழுத்தி, கிடைக்கும் மெனுவில் "Accessories", "Ease of Access", "Ease of Access Center" எனச் சென்று தேர்ந்தெடுக்கவும்.

2. "Ease of Access Center" என்ற விண்டோ காட்சி அளிக்கையில், கீழாகச் சென்று, "Make it easier to focus on tasks" என்பதில் கிளிக் செய்திடவும்.



3. இதில் கீழாகச் சென்று, "Turn on Toggle Keys" என்பதில் உள்ள டிக் அடையாளத்தை எடுத்துவிடவும்.

4. அடுத்து மாற்றங்களை சேவ் செய்திட ஓகே கிளிக் செய்திடவும்.

இனி டாகிள் கீகளை (நம் லாக், கேப்ஸ் லாக், ஸ்குரோல் லாக்) அழுத்தும் வேளைகளில் சத்தம் எதுவும் ஏற்படாது.

கேள்வி: எனக்கு அடிக்கடி சில ஆங்கிலச் சொற்களுக்கு பொருள் தேவைப்படுகிறது. நல்ல ஆன்லைன் டிக்ஷனரி ஒன்றைச் சொல்லவும். அதில் அனைத்து சொற்களுக்கும் பொருள் இருக்க வேண்டும்.

கா.கலைச் செல்வி, விருதுநகர்.

பதில்: அடிக்கடி சொல்லுக்குப் பொருள் தேடும் நீங்கள் ஒவ்வொரு இணைய தள அகராதியாகச் செல்ல வேண்டாம். ஆனால் அதற்குப் பதிலாக, ஒரே முயற்சியில் அனைத்து டிக்ஷனரிகளும் தரும் பொருள் வேண்டும் என்றால், கூகுள் செல்லலாம். கூகுள் சர்ச் பாக்ஸில் define:WORD என்ற பார்மட்டில் அந்த சொல்லை டைப் செய்திடவும். இதில் WORD என்ற இடத்தில் நீங்கள் பொருள் தேடும் சொல்லை டைப் செய்திட வேண்டும். உடன் கூகுள் ஆன்லைனில் உள்ள அனைத்து டிக்ஷனரிகளிலும் இந்த சொல்லுக்குப் பொருள் தேடி வரிசையாகத் தரும். இதனால், உங்கள் அலைச்சல் மிச்சமாகும்.

கேள்வி: இன்டர்நெட் இணைப்பு தரும் பல நிறுவனங்கள், தாங்கள் மிக வேகமான இணைப்பைத் தருவதாக உறுதி மொழி தருகின்றனர். உண்மையான வேகம் என்னவென்று நமக்குச் சொல்லும் தர்ட் பார்ட்டி புரோகிராம் ஏதேனும் உள்ளதா?

சி.ஆர். ஜெயமோகன், கம்பம்.

பதில்: புரோகிராம் வேண்டாம் ஜெயமோகன். இணைய இணைப்பினைப் பெற்றவுடன், நீங்கள் கேட்டபடி இணைய இணைப்பினைத் துல்லியமாக அறிவிக்கும் தளம் ஒன்றுக்குச் சென்று, நீங்கள் விரும்பிய தகவலைப் பெறலாம். http://speedtest.net/ என்ற முகவரியில் உள்ள தளத்திற்குச் செல்லுங்கள். அங்கு வேகத்தைச் சோதனை செய்வதற்கான தொடர்பில் கிளிக் செய்தால், உடனே உங்கள் பிராட்பேன்ட் இணைப்பிற்கான ரௌட்டருக்கும் கம்ப்யூட்டருக்குமான வேகத்தையும், இன்டர்நெட் டவுண்லோட் ஸ்பீடையும் அது அளந்து காட்டும். கீழாக உங்களுக்கு இன்டர்நெட் இணைப்பு தரும் நிறுவனத்தின் பெயருடன், இணைப்பின் தன்மையை நட்சத்திரக் குறியிட்டுக் காட்டும்.



அதிலேயே வரைபடம் ஒன்று காட்டப்பட்டு அதில் இணைய இணைப்பினை நீங்கள் பெறும் நகரம் சுட்டிக் காட்டப்படும்.

கேள்வி: இணையத்திலிருந்து எப்போதும், தேவையான தளங்களிலிருந்து, டெக்ஸ்ட் தேர்ந்தெடுத்து, வேர்ட் பைலில் காப்பி செய்கிறேன். காப்பி செய்யப்படும் டெக்ஸ்ட், ஏற்கனவே உள்ள வரிகளின் ஸ்டைலைப் பின்பற்றாமல், மிகவும் சிறியதாக அமைகிறது. இதனை எப்படி மாற்றி அமைக்கலாம்?

– சி.ஆர். மௌலி, கோவை.

பதில்: நல்ல கேள்வி. டெக்ஸ்ட்டை பேஸ்ட் செய்தவுடன், டெக்ஸ்ட் முடிவடையும் இடத்தைக் கவனித்தால், மிகச் சிறிய அளவில் ஒரு ஐகான் கிடைக்கும். டெக்ஸ்ட் வேர்ட் பைலில் ஒட்டியவுடனேயே இதனைக் காண வேண்டும். இதில் கிளிக் செய்தால், சிறிய பாப் அப் கட்டம் கிடைக்கும். அதில் மூன்று ஆப்ஷன்கள் தரப்



பட்டிருக்கும். அவை - Keep Source Formatting, Match destination Formatting மற்றும் Keep Text only ஆகியவை ஆகும். உங்கள் விருப்பம் நிறைவேற இரண்டாவது ஆப்ஷனான Match destination Formatting என்பதைத் தேர்ந்தெடுத்தால், டெக்ஸ்ட் உடனே, ஏற்கனவே இருக்கும் டெக்ஸ்ட்டுக்கு ஏற்ப மாறிக் கொள்ளும்.

கேள்வி: சில நாட்களாக என் கம்ப்யூட்டரில் "A script on this page is causing IE to run slowly. If it continues to run, your computer might become unresponsive" என்று ஒரு மெசேஜ் கிடைக்கிறது. இதனை எப்படி நான் சரி செய்திட முடியும்?

என்.செல்வம், திருப்பூர்.

பதில்: நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் இணைய தளத்தில் பயன்படுத்தப் பட்டுள்ள ஜாவா ஸ்கிரிப்ட் அல்லது விசுவல் பேசிக் ஸ்கிரிப்ட் ஆகிய ஒன்றில், ஏதேனும் பிரச்னை ஏற்பட்டிருந்தாலோ, அல்லது அவை இயங்குவதில் தாமதம் ஏற்பட்டாலோ இந்த எர்ரர் மெசேஜ் கிடைக்கும். ஸ்கிரிப்ட் இயங்க அதிக நேரம் எடுத்துக் கொள்கையில், உங்கள் இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசர், "என்ன நீங்கள் காத்திருக்கிறீர்களா? அல்லது இதனை நிறுத்தி



விடலாமா?" எனக் கேட்கிறது. இதற்கான தீர்வினை மைக்ரோசாப்ட் நிறுவனம் http://support.microsoft.com/kb/175500 என்ற முகவரியில் உள்ள தளத்தில் தருகிறது. இந்த தளம் சென்று Microsoft Fix it 50403 என்ற ஐகானில் கிளிக் செய்து, அங்கு கிடைக்கும் டயலாக் பாக்ஸ் தரும் வழிகள் படி சென்றால், இந்த பிரச்னையைத் தீர்க்கலாம். பிரச்னை உள்ள கம்ப்யூட்டரில் இந்த தீர்வினைப் பார்க்கவில்லை என்றால், தீர்வினை ஒரு சிடி அல்லது ப்ளாஷ் ட்ரைவில் பதிந்து, பின்னர், அதனை பிரச்னைக்குரிய கம்ப்யூட்டரில் இணைத்துச் செயல்படுத்தலாம்.

மொபைல் போன் டிப்ஸ்

திரையில் உள்ள லிக்விட் கிறிஸ்டல் டிஸ்பிளே (LCD) மீது அழுத்தத்தைப் பிரயோகித்தால் திரை கெட்டுவிட வாய்ப்பு உள்ளது. எனவே பாக்கெட்டில் போனை வைத்திடுகையில் ஏதேனும் கூர்மையான அல்லது பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய பொருள் மொபைல் போனுடன் உரசிக் கொண்டிருக்கிறதா என்பதைக் கவனித்துச் செயல்படவும். போம் கவர்கள் அல்லது பிளாஸ்டிக் கவர்கள் இந்த வகையில் பாதுகாப்பு தரலாம்.